செ.வெ.எண்: 49 நாள்: 22.10.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் கோவில்பத்து சேமிப்பு கிடங்கு, திருப்பூண்டி ஊராட்சி திறந்தவெளி நெல் சேமிப்பு மையம், மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தையும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.A.சிவஞானம் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கோவில்பத்து சேமிப்பு கிடங்கு,திருப்பூண்டி ஊராட்சி திறந்தவெளி சேமிப்பு நெல் சேமிப்பு மையம், மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தையும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.A.சிவஞானம் இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.10.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.

நடப்பு காரீப் பருவம் 2021-2022-ல் நாகப்பட்டினம் மாவட்டத்தில், விவசாயிகளின் நலன் கருதி 01.10.2021 முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறந்து செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை துறை அலுவலர்கள் / தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் தரக்கட்டுபாடு அலுவலர்கள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதுவரை 87 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 6752 பயனாளிகளிடமிருந்து 23106 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு அதற்குண்டான தொகை ரூ.31,32,98,062.00 வரை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் அனைத்தும் திறந்தவெளி சேமிப்பு மையங்கள் / கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள நெல்லை இருப்பு வைப்பதற்கு கூடுதல் கிடங்குகள் தேவைப்பட்டால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடங்குகள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம் என தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.A.சிவஞானம் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

திருப்பூண்டி திறந்தவெளி சேமிப்பு மையம் மற்றும் நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களிடம் மழை காலம் என்பதால் நெல் மூட்டைகள் தேக்கம் அடையாமல் உடனுக்குடன் நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைப்பதற்காக விரைந்து இறக்குமாறு சுமை தூக்கும் தொழிலாளர்களிடம் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் போ.பாண்டியன் அவர்கள், துணை மேலாளர் (கொள்முதல் மற்றும் இயக்கம்) திரு.ஜி.ரெங்கநாதன் அவர்கள், துணை மேலாளர் தரகட்டுபாடு ஜி.சீனிவாசன் அவர்கள் மற்றும் அரசு அலுவர்கள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,நாகப்பட்டினம்.**